# இதய வேந்தனே என்னில் எழுந்து வா

இதய வேந்தனே என்னில் எழுந்து வா
உலகில் உதித்தவா என்னில் உதிக்கவா
வார்த்தையானவா வழியுமானவா
உயிருமானவா உணவுமானவா
இருளை மாற்றி
ஒளியை ஏற்றவா - என் இறைவா

**1**
கன்னி மரியின் மடியில் தவழ்ந்தவா
கவலை யாவும் தீர்க்க எழுந்துவா
வாழ்வைத் தேடி அலையும் நெஞ்சம்
கோடி உலகிலே
வாழ்வுக்குப் பலமாய் என்னில் எழுவாய்

**2**
அன்பின் ஆட்சி அவனியில் ஓங்கிட
அமைதி எந்தன் மனதில் நிலவிட
ஆயனில்லா ஆடு போல தவிக்கும் என்னிலே
ஆறுதல் மழையைப் பொழிந்திட எழுவாய்